## மக்கள் தொகையை அரசியல் ரீதியாக ஆயத்தமாக்குவதா?

# மாநில உரிமைகளை பறிக்கும் தொகுதி மறு சீரமைப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவில் எச்சரிக்கை!

**சென்னை, ஏப். 2-**

**நியாயமற்ற முறையில் தொகுதி மறு சீரமைப்பு கொண்டு வரப்படுகிறது என்றும், மாநில உரிமைகளை பறிக்கும் அபாயம் உண்மையானது. அது மிக அருகாமையில் வந்து விட்டது என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-


Outlook
Viksit South
Delimitation: Will South Pay the Price for Delhi's Negligence?
Delimitation will reduce Tamil Nadu, and by extension much of the south, to spectators in a democracy where they have long been equal stakeholders
BY KAVITHA MURALIDHARAN 28 March 2025
South's Concerns About Delimitation are Well-Founded
Palanivel Thiaga Rajan, Minister for Information Technology and Digital Services of Tamil Nadu, writes in Outlook's latest issue on how this Central government, with its proclivity for...
BY PALANIVEL THIAGA RAJAN 30 March 2025
Delimitation: South India Won't Back Down
As South India opposes changes like delimitation and the push for Hindi, fearing a loss of political power and cultural harm, the struggle raises larger concerns about fairness and regional rights in India
BY OUTLOOK BUREAU 30 March 2025
We Need a New Delimitation Formula
Delimitation, if done mechanically, could fracture India's federal fabric. If done wisely, it could strengthen democracy
BY SANJAY HEGDE 30 March 2025

மக்களை தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பின் அபாயம் குறித்து அவுட்லுக் இந்தியா இதழில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் எழுதியுள்ள செய்திக்கட்டுரையை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சமூக வலைதள பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், நியாயமற்ற முறையில் தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வரப்படுகிறது, அது முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள்தொகையை அரசியல் ரீதியான ஆயுதமயமாக்குவதாக உள்ளது என்று முதலமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியா இப்போது ஒரு குறுக்கு வழியில் நிற்கிறது. இப்போது நம் மூதாதையர் விரும்பிய கூட்டாட்சி தத்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டுமா அல்லது கலாச்சார ரீதியான ஒற்றை ஆட்சியை மறைக்கும் ஒரு வெற்று பெரும்பான்மைவாதத்திற்கு சரணடைவதா என்பது குறித்து நாம் முடிவெடுக்க வேண்டிய சூழலில் நிற்கிறோம் என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் மாநில உரிமைகளை பறிக்கும் அபாயம் உண்மையானது மிக அருகாமையில் வந்து விட்டது என எச்சரித்துள்ள முதலமைச்சர், நமக்காகப் பேசுவதன் மூலம் நாம் அனைவருக்காகவும் பேசுகிறோம் என தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச்சட்டம், கூட்டாட்சி தத்துவம் மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு இந்திய குடிமகனும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்தாக வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதில் அறிவுறுத்தியுள்ளார்.

## தென்காசி தெற்கு மாவட்ட மகளிரணி - மகளிர் தொண்டரணி சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

## வே.ஜெயபாலன் தலைமை! ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ராணி சிறப்புரை!

தென்காசி, ஏப்.2 -

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கீழப்பாவூர் மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் தலைமையில் மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, தமிழ்ச்செல்வன், மாவட்டப் பொருளாளர் ஷெரீப், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகசாமி, சேக்தாவூது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், அருள், தமிழ்செல்வி, கீழப்பாவூர் பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன்அறிவழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சங்கீதா சுதாகர் வரவேற்றார். மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திவ்யா மணிகண்டன் நிகழ்ச்சி தொகுப்புரை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன்டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த், மாநில பேச்சாளர்கள் ஆரணி மாலா, குடியாத்தம் புவியரசு, ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ஜெயக்குமார், சிவன்பாண்டியன், மகேஷ்மாயவன், செல்லத்துரை, அன்பழகன், நகரச் செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், கணேசன், பேரூர் செயலாளர்கள் சுடலை, நெல்சன், லட்சுமணன், பண்டாரம், முத்து, கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபிபுர் ரஹ்மான், தொண்டரணி அமைப்பாளர் இசக்கிபாண்டியன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், மாவட்டப் பிரதிநிதி பொன்செல்வன், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ரஜப்பாத்திமா, வைத்தீஸ்வரி, மல்லிகா, சுசீலா, சரஸ்வதி, சுந்தரி, கற்பகசெல்வி, மாரியம்மாள், ராசாத்தி, ஷாலிமேரி, ஹபீப்நிஷா, பாண்டிராணி, ராஜேஸ்வரி, மாரிசெல்வி, சபர் நிஷா, விமலாராணி, மாரிசெல்வி, சிவசண்முக ஞானலட்சுமி, கலாநிதி, சமுத்திரகனி, தனலட்சுமி, ஷோபனாராணி, மல்லிகா, சாந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி நகரச் சிறந்த நிர்வாகிகளை பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு காப்போம் என்ற உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் பேரூர் செயலாளர் ஜெகதீசன் நன்றி உரையாற்றினார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றிய கழகம் சார்பில், ரிஷிவந்தியம் ஊராட்சியில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ரூ.4.034 கோடியை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய சர்வாதிகார பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது, இதில் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.பெருமாள், ஒன்றியக் குழு தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், தெற்கு மாவட்டக் கழக பொருளாளர் ஆதி.கு.கோவிந்தராஜன், கிளைக் கழகச் செயலாளர் சிவமுருகன், ஊராட்சி மன்ற தலைவர் வினிதா மகேந்திரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.


கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னசேலம் வடக்கு ஒன்றியம் & பேரூர் கழகம் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் தலைமையில், சின்னசேலம் காந்தி பொதுமேடையில் நடைபெற்றது. இதில் சின்னசேலம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், ஒன்றிய குழு துணை பெருந்தலைவருமான வி.வி.அன்புமணிமாறன், சின்னசேலம் பேரூர் கழக செயலாளர் கே.எம்.செந்தில்குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். இந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கழக மாநில கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார், மேலும் மாநில மகளிரணி துணைச் செயலாளர், ஆ.அங்கையற்கண்ணி, சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் வி.அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர், இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை மற்றும் வார்டு கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ 44 லட்சம் மதிப்பீட்டில் 11 ஊராட்சிகளில்

# தூய்மை பணியை மேற்கொள்வதற்கு 19 மின்கல வண்டிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஏப். 2-

செஞ்சி ஊராட்சி ஒன்றியஅலுவலகத்தில் ரூ 44 லட்சம் மதிப்பீட்டில் 11 ஊராட்சிகளில் தூய்மை பணியை மேற்கொள்வதற்கு19 மின்கலவண்டிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தூய்மை பாரத இயக்கம்திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ்வேலந்தாங்கல், கோனை, சத்தியமங்கலம், பாடி பள்ளம், ஆலம் பூண்டி, செம்மேடு, நல்லான் பிள்ளை பெற்றால் உள்ளிட்ட 11 ஊராட்சிகளில் தூய்மை பணியை மேற்கொள்வதற்காக மின்கல வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன் பிரபா சங்கர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 11 ஊராட்சிகளுக்கு ரூபாய் 44 லட்சம் மதிப்பீட்டிலான 19 மின் கலன் வண்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம் வழுதி, மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஒன்றியக் கவுன்சிலர் டிலைட் ஆரோக்கிய ராஜ், பனிமலர் ராஜாராம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அய்யனார், தாட்சாயனி கார்த்திகேயன், அபர்ணா ரவிசங்கர், முத்தம்மாள் சேகர்,நீலாவதி பஞ்சாட்சரம், அம்பிகா அய்யனார், பிருந்தா சக்தி முருகன், சுபா குமார் உள்ளிட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பழனி, குமார், அபிராமி, செஞ்சி ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பெருங்கப்பூர் ராஜேந்திரன், அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, தொண்டரணி பாஷா, இளைஞரணி பழனி, செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் கோவிலில் இலவச திருமணம்!

வேலூர், ஏப். 2-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரின் போது இந்து சமய அறநிலைத்துறையின் கீழ் செயல்படும் திருக்கோவில்களில் இந்து ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இலவச திருமணங்கள் நடத்தப்படும் என்றும் அதற்கான சீர்வரிசை மற்றும் செலவீனத் தொகை ரூ.50,000 என்றும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலைத் துறையின் கீழ் உள்ள திருக்கோவில்களில் வேலூர் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டத்திலும் இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடைபெற்றது.

வேலூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா அடுத்த விரிஞ்சிபுரம் மார்க்கந்தீஸ்வரர் திருக்கோவிலில் திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தாலுகா துத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சிலம்பரசன் என்பவருக்கும் ஆம்பூர் புதுமனை பகுதியைச் சேர்ந்த பிரியதர்ஷினி என்பவருக்கும் இலவச திருமணம் நடைபெற்றது.

இதில் வேலூர் மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை தலைவர் நா.அசோகன் தலைமையிலும் கோவில் செயல் அலுவலர் பிரியா முன்னிலையிலும் பாரம்பரிய முறைப்படி இலவச திருமண நடத்தி வைக்கப்பட்டது.

அதில் மணமக்களுக்கு 4 கிராம் தங்கம், பீரோ, கட்டில் உள்பட ரூ.10 ஆயிரம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன. திருமணத்திற்கான சான்று கோவில் நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்டது. திருமணத்தில் கலந்து கொண்ட உறவினர்கள் அனைவருக்கும் விருந்து உபசரிக்கப்பட்டது.

இந்த இலவச திருமண நிகழ்வில் விரிஞ்சிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் குணசுந்தரி பாலச்சந்திரன் ஒன்றிய கவுன்சிலர் சசிகலா சுப்புராயன், தக்கார் ஆய்வர் செண்பகம் உதவி ஆணையாளர் சங்கர் மற்றும் கோவில் ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தியாகதுருகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், ஒன்றியக் குழு துணைத் தலைவருமான இரா.நெடுஞ்செழியன் முன்னிலையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கடந்த நான்கு மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்ட நிதி ரூ.4034 கோடியை தமிழ் நாட்டிற்கு வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினார், நிகழ்வில் தியாகதுருகம் பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், வார்டு கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள் மற்றும் அனைத்து அணியைச் சார்ந்த தோழர்கள் ஊர் பொதுமக்கள் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொண்டனர்.


முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் என்ற அறிவிப்பை அடுத்து உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எலவனாசூர் கோட்டை பகுதியில் அதற்கான இடத்தை தேர்வு செய்யும் பணியை உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர், ஆ.ஜெ.மணிக்கண்ணன் நேரில் சென்று பார்வையிட்டார், அப்போது உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர், ஒன்றியக் குழு பெருந்தலைவர் பா. இராஜவேல், மாவட்ட, ஒன்றிய , நிர்வாகிகள், ஒன்றிய உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.